# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1823 - 2013 අගෝස්තු මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.08.08

*1823 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1740 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கண்டி மாநகர சபை

*ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தையிலிருந்து திரும்பிச் செல்லும் துணை பாதையை கண்டி மாநகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கான அறிவித்தல்*

கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைக்குள் உள்ள ஸ்ரீமத் குடாரத்வத்தை பாதையிலிருந்து ஆரம்பிக்கும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. பீ. எச். டீ. த. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.09.18 ஆந் திகதியிட்ட 1836 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள,

வடக்கு: வரிமதிப்பு ஆதன இல. 319, 319/1, 319/2, 319/2/1/1, 319/5 ஆகிய ஆதனங்களும், தெற்கு: வரிமதிப்பு ஆதன இல. 319/6, 319/7, 319/8, 321 ஆகிய ஆதனங்களும் மேற்கு: வரிமதிப்பு இல. 319/5 எனும் ஆதனமும் கிழக்கு: ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தையும் ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள 18.30 பேர்ச்சஸ் அளவுடைய ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தையிலிருந்து ஆரம்பிக்கும் துணை பாதையை, 2012.07.26 ஆந் திகதியிட்டதும் 8 (39) ஆம் இலக்கமும் உடைய மாநகர சபை அங்கீகாரத்துக்கு ஏற்ப, கண்டி மாநகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பாதையை கண்டி மாநகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு எதிர்ப்புக்கள் இருப்பின், இந்த பகிரங்க அறிவித்தல் வெளியாகி, ஒரு மாத காலத்திற்குள் அவ்வெதிர்ப்புக்களை எழுத்து மூலம் “மா நகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி” எனும் முகவரிக்கு அறிவிக்கும்படி இத்தால் அறியத் தருகின்றேன்.

அவ்வாறு எதிர்ப்புக்கள் ஏதும் முன்வைக்கப்படாதவிடத்து, மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 48 (1), (2), (3), (4) உப வாசகங்களின் பிரகாரம் கண்டி மாநகர சபைக்கு இந்த பாதை உரித்தாக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

சந்தன தென்னகோன்,
மாநகர ஆணையாளர்.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி.

8-288

## பண்டாரவளை மாநகர சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டம்*

‘மக்கள் மயப்படுத்தப்பட்ட அமைப்புகளின் மூலம் முகாமை செய்யப்படும் கிராமிய நீர் வழங்கல் முறை தொடர்பிலான உப விதி’

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு இணங்க, ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட, 2013, சனவரி 22 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1974 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் (அதிவிசேட) IV (அ) இன் பிரிவு/மாகாண மற்றும் பிரிவின் ஊவா மாகாண சபையின் மாகாண மற்றும் அறிவித்தலின் கீழ் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட “மக்கள் மயப்படுத்தப்பட்ட அமைப்புகளின் மூலம் முகாமை செய்யப்படும் கிராமிய நீர் வழங்கல் முறை தொடர்பிலான உப விதி” தொடரின் இலக்கம் 1 தொடக்கம் 25 வரை உப விதி பண்டாரவளை மாநகர சபை செயற்பாட்டு எல்லை பிரதேசத்துக்கு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் பண்டாரவளை மாநகர சபையினால் ஏற்றுக் கொள்வதற்கு உகந்தது என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்பதனை இத்தால் அறியத்தரப்படுகிறது.

எச். எம். ஜே. ஹேரத்,
மாநகர ஆணையாளர்.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2013, யூலை 4.

8-445